ஸ்ரீ ராமஜெயம்.

புதிய இராமாயணம்

எழுதியது -

அருட் குமரேசன்

சுயமரியாதைச் சுத்த வீர சீர்திருத்தத் தமிழ்ச் சைவ சிங்கம்.

ஈரோடு.

1953.

பொருள் அடக்கம்.

1. முன்னுரை.

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல, கால வகையினுனே என்ற ஆன்றோர் கருத்தின்படியே, புதிய இராமாயணம் நடைபெற்று வரும், இந்த இருபதாம் நூற்றாண்டில் பழைய இராமாயணத்தைப் படித்துக்கொண்டு இருப்பது மட்டும் போதாது என்பதாகத்தான் பழைய இராமாயணத்தைக் கொளுத்திவிட்டு, புதிய இராமாயணத்தைப் பூர்த்தி செய்வதற்கு எல்லோரும் செயலில் ஈடுபட்டு வாருங்கள் என்று, எனது சுயமரியாதைக் குருவாகிய பெரியார் அவர்களும், மாஜி தோழர்களும் கூறி வருகிருர்கள். ஆகவே அந்தப் புதிய இராமாயணம், என்ன வென்பதைப்பற்றியும், அதற்காக ஒவ்வொரு தேச பக்தர் களும், என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றியும், எல்லோரும் தெரிந்துகொள்ளும் பொருட்டு, சிறியேன் எனது வாழ்க்கை வரலாற்றையும், அனுபவத்தையும் உதாரணமாகக்கொண்டும், ஆண்டவன் அருளைத்துணை கொண்டும், இச் சிறிய நூலை எழுதி முடித்திருக்கிறேன். அதாவது அன்னிய ஆட்சிக் காலத்தில், நடந்த யுத்தத்தின் போது சிறியேன், யுத்த சேவையில் (தாலூகா சொற்பொழி வாளர்) பங்கெடுத்துக்கொண்டு, பிரிட்டிஷ் ஆட்சி வெற்றி பெறும்படியாகவும், இட்லரிசம் அழியும்படியாகவும், இறைவனைப்பிரார்த்தித்து வந்ததுடன், அதே சமயத்தில், காந்தி யடிகளின் விருப்பம், பூர்த்தியடைவதற்காகவும் (இந்தி யாவின் அடிமைதனை நீக்கு நீக்கு, இங்கு ஏக்கமுற்ற பக்தர் குறை போக்கு போக்கு என்று) இறைவனைப் பிரார்த்தித்து வந்திருக்கிறேன். அதுபோலவே இப்பொழுது நம் நாட்டில், நடைபெற்றுவரும் அரசியல் போராட்டத்தில், ஒரு காங்கிரஸ் அபிமானியாகவும், காந்திய வாதியாகவும் இருந்துகொண்டு, தேச பக்தியின் பேரால், ஏற்பட்டுள்ள அரசியல் இயக்கங்கள் எல்லாம், திருந்தப்பெற்று, தெய்வ பக்தியாகிய ஆத்மீயக் கொள்கையைக் கடைப்பிடித்து வரவேண்டும் என்று,' இறைவனைப் பிரார்த்தித்து வருவ

துடன், சுயமரியாதைத் தந்தையாகிய பெரியார் அவர்களது நோக்கம் நிறைவேறும் பொருட்டும், திராவிடநாடு என்னும் இத் தமிழ்நாடு தனி நாடாக இருந்து ஆட்சிபுரிவதற்கு (தவப்பயன் ஏந்தி நிற்போமே, தமிழ்க்கொடி தழைத்து ஓங்குமே, என்ற அருள் வாக்குப்படி) கலியுகக் கடவுளாகிய முருகபிரானைக் குறித்துத் தோத்திரம் செய்வதும் எனது கடமையாகும்.

ஆகையால் ஒவ்வொரு தேச பக்தர்களும் இவ்வுண்மையை நன்குணர்ந்து இந்நூலை ஆதரித்து ஊக்கமளிப்பதுடன், இந்த இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களும் வாழ்ந்து வருபவர்களுமாகிய சில பெரியார்களது வரலாற்றைக்கூறும், புதிய புராணம் ஒன்று எழுதி முடிப்பதற்கும், ஆசீர்வதிக்கவேணுமாய் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றும், கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற் கூற்றம், என்பதுபோல் அல்லாமல், கற்றுணர்ந்த மாந்தருக்குக் கல்லாதான் சொற்கூற்றம் என்பதாக இந்நூல் இருந்தபோதிலும், மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல் இனிது, என்ற பெரியோர் வாக்குக் கிணங்க, எனது புன் சொல்லை இன்சொல்லாக ஏற்று, அங்கீகரிக்கும்படி மறுமுறையும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பழைய இராமாயணம் எழுதி முடிப்பதற்குப் பொருளுதவி செய்து, ஆதரித்து புகழ்பெற்றுள்ள திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல் அவர்களைப்போலவே, இப்பொழுது புதிய இராமாயணம் எழுதி அச்சிடுவதற்குப் பொருளுதவி செய்து, ஆதரித்து வரும் தமிழ் நாட்டின் தவப்புதல்வரான புகழ் வள்ளல், உயர் திரு பழையகோட்டை பட்டக்காரர், நல்ல சேனுபதிச் சர்க்கரை மன்றாடியார் அவர்களுக்கு, எனது நன்றி கலந்த வணக்கம் உரியதாகுக.

இங்ஙனம்,

அருட்குமரேசன்.

2. இறை வணக்கம்.

கண்ணன் துதி,

ஆரணப் பொருளே போற்றி அகில நாயகனே போற்றி
பாரளந் தவனே போற்றி பாண்டவர் தூதா போற்றி
வாரணம் அழைத்த போது வந்துகாத் தவனே போற்றி
காரண வஸ்து வான கண்ணனே போற்றி போற்றி.

செல்வக்குமாரர் துதி.

வெண்பா.

சீராரும் சின்னமுத்தூர் செல்வக் குமாரர்மிசை
பாராரும் தோத்திரப்பா பாடுதற்கு—ஏராரும்
சங்கரனு ரீன்றசுதன் சத்திவல்லபை கொழுநன்
ஐங்கரன்றன் றாளே யரண்.

(உள்ளமிக மகிழும் வள்ளி மணாளனே என்ற பாட்டின் சந்தம்.)

1. சின்னமுத்தூரில்வளர் செல்வக்குமாரனே
சிறியேனைக் காரும் தீரனே—கெம்பீரனே
சிறியேனைக் காரும் தீரனே
செந்தமிழ்ப் பாடவே வந்தெனை யாதரி
கந்தனே என்றுனைச் சந்ததம் போற்றினேன் (சின்)

2. நன்னயமாகவேதான் நம்பி வந்தேனையா
நாயேனுன் பதமலர் மெய்யா—பன்னிருகையா
நாயேனுன் பதமலர் மெய்யா
நங்கை வள்ளியோடு மங்கை தெய்வயானையை
சங்கையிலா தேற்ற சிங்கமே வந்தருள் (சின்)

3. புள்ளிமயில்மீதேறும் வள்ளிமணாளனே
போற்றிடுவேன் பொற்றாளனே—திண்டோளனே
போற்றிடுவேன் பொற்றாளனே
புண்ணியமூர்த்தியே கண்ணியமாய் நீயும்
எண்ணியகாரியம் திண்ணமாய்த் தந்தருள் (சின்)

4. கள்ளமில்லாமனத்தோன் கவிமாலை சூடுமே
கந்தாவெனவும் நாடுமே—அருள் கூடுமே
கந்தாவெனவும் நாடுமே
கருப்பண்ணனீன்ற அருட்குமரேசனும்
விருப்பமுடனுந்தன் திருப்பதம் நாடினேன் (சின்)

ராவுத்தர் துதி. (வெண்பா)

கார்பூத்த காகநகர் கண்ணர் குலமதற்கோர்
சீர்பூத்த தெய்வமெனச் செப்பலுற்றேன்—பார் பூத்த
பட்டாணி ராவுத்தர் பட்ச மறவாதிருப்பேன்
கட்டாயம் வந்தென்னைக் கா

ஈரோடை அப்பர் துதி. (வெண்பா)

இருவினையாம் நீரோடை ஈன்றெடுத்த மாபெருஞ்சீர்
திருவினையாம் ஈரோடைத் தேசிகனே—பெருவினையாம்
வையகத்து மாந்தருளம் மகிழ்ச்சி ததும்பஅருள்
சைவந் தழைக்கவினித் தான்.

3. குரு வணக்கம்.

இந்நூலுக்கு மூலகர்த்தாவான ஸ்ரீராமபிரானையும், எனது இஷ்ட தெய்வமாகிய ஸ்ரீ செல்வக்குமாரரையும் இந்நூல் எழுதுவதற்கு அருள் புரியுமாறு வேண்டிக்கொண்டு, இந்நூலுக்குப் பிரதான அங்கம் வகிப்பவர்களும், இந்தியாவுக்கு இரு கண் போன்றவர்களும் (ஞானக்கண் இல்லாதவர்கள்) அரசியல் குருவுமாகிய **வடநாட்டுப் பெரியார் காந்தியடிகளுக்கும்,** ஆத்மீக குருவான **தென்னாட்டுப் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கும்** எனது பணிவான வணக்கத்தையும், காணிக்கையாக இந்நூலையும் சமர்ப்பித்துக் கொள்ளுகின்றேன்.

சுபம்.

4. நூல் வரலாறு.

சிறியேன் செயற்கையில் (வேடத்தில்) சிவ சின்னங்களாகிய விபூதி, ருத்ராட்சம் அணிந்துள்ள ஒரு சிவ பக்தனாக இருந்தபோதிலும், இயற்கையில் (வாழ்க்கை முறையில்) காங்கிரஸ் கொள்கை என்கிற தேசபக்தி (இராவணனுதிக்கம்) காரணமாக, வாழ்க்கைத் துணைவியாகிய சீதையைப் பறிகொடுத்திருக்கும் ஒரு கலியுக இராமன் ஆவேன் என்பதையும், ஆனால் வடநாட்டு ஆரிய இராமனைப்போல் தென்னாட்டு திராவிட இராமனாகிய நான்(இராவண சம்ஹாரம்செய்யாமல்) ஒவ்வொரு தேசபக்தர்களாகிய இராவணர்களையும் ஒவ்வொரு இராமராகப் பாவித்து வணங்கி வருபவன் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொண்டு, ஆண்டவன் ஒரு காலத்தில் நரியைப் பரியாக்கியது போலவும், அடியேன் ஒரு தேர்தல் சமயத்தில் புலிகள் எல்லாம் பசுவாக மாறவேண்டும் என்று சொல்லிவந்தது போலவும், இப்பொழுது காங்கிரஸ் கொள்கையையுடைய தேசபக்தர்கள் அனைவரையும், கடவுள் கொள்கையையுடைய தெய்வபக்தர்களாக மாறும்படி பிரார்த்தித்து வருவதுடன் இதற்கு உதாரணமாக எனது வாழ்க்கையில் நடந்துள்ள சில காரண காரியங்களை எடுத்துக் கூறவும் கடமைப்பட்டுள்ளேன்.

பழையதும் புதியதும்

1. பழைய இராமாயணத்தில் கண்ட இராமர், பட்டம் ஏற்றுக்கொள்ளும் சமயத்தில் கூனியின் பொறாமையாலும், துர்ப்போதனையாலும், தனது வாழ்க்கைத் துணைவியாகிய சீதையுடன் காட்டிற்குச் செல்லவேண்டி நேரிட்டது என்பதாகப் புராண வரலாறு கூறுகிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயம் ஆகும்.

அதுபோலவே, கலியுக இராமனாகிய சிறியேனும் எனது வாழ்க்கைத் துணைவியுடன் சொந்த கிராமத்தில் ஆசிரியர்

பதவி ஏற்றுக்கொள்ளும் சமயத்தில், சில கூனிகளின் பொறுமையாலும், துர்ப்போதனையாலும் வேறொரு கிராமத்திற்குச் செல்ல வேண்டி நேரிட்டது என்பதை எல்லோருக்கும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2. பழைய இராமாயணத்தில் கண்ட இராமர் சீதையுடன் காட்டிற்குச் சென்றதன் காரணமாகவே இராவணன் என்னும் ஒரு அரக்கன் அந்தச் சீதையின்மேல் ஆசை கொண்டு, சூழ்ச்சியினால் சிறையெடுத்துப்போனதாக புராண வரலாறு கூறுகிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயமாகும்.

அதுபோலவே, கலியுக இராமனாகிய நானும் எனது வாழ்க்கைத்துணைவியுடன் வேறு கிராமத்திற்குச் சென்றதன் காரணமாகவே, அங்கிருந்த பேராசைப் பேய்பிடித்த ஒரு துராத்மாவாகிய இராவணன் அற்ப சுயநலத்தைக் கருதி (உத்தியோகத்தின் பொருட்டு) எனது வாழ்க்கைத் துணைவியின் உயிரை சதியாலோசனையால் கவர்ந்து விட்டான் என்பதை எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

3. பழைய இராமாயணத்தில் கண்ட இராமர், ஆண்டவன் சோதனையால் காட்டிற்குச் சென்று சீதையை இழந்து 14-வருட காலம் அநேக துன்பங்களை அனுபவித்துப் பிறகு நாட்டுக்குத் திரும்பியதாகப் புராண வரலாறு கூறுகிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயமாகும்.

அதுபோலவே, கலியுக இராமனாகிய நானும் ஆண்டவன் சோதனையால் எனது வாழ்க்கைத்துணைவியை இழந்தும், உத்தியோகத்தை இழந்தும் 24-வருட காலம் அநேக துன்பங்களை அநுபவித்து வந்திருக்கிறேன் என்பதை எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

4. பழைய இராமாயணத்தில் கண்ட இராமர் சீதையைத் தேடி அலையும் சமயத்தில், வாலி சுக்ரீவன் என்னும் வானரத் தலைவர்களான அண்ணன் தம்பிகள் சண்டையில் தலையிட்டு துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனம் என்கிற முறையில் வாலியைக் கண்டித்து சுக்ரீவனை ஆதரித்திருப்பதாகப் புராண வரலாறு கூறுகிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயமாகும்.

அதுபோலவே கலியுக இராமனாகிய நானும் எனது ஜீவனோபாயத்தின் பொருட்டு வேலை தேடி அலையும் சமயத்தில், பிரிட்டிஷ் சர்க்கார் என்கிற சுக்ரீவனுக்கும், இட்லர் என்கிற வாலிக்கும் நடந்த யுத்தத்தில், பிரிட்டிஷ் சர்க்காரை ஆதரித்து இட்லரிசம் அழிவதற்கு முக்கிய பங்கு எடுத்துக் கொண்டிருந்தேன் என்பதை எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

5. பழைய இராமாயணத்தில் கண்ட இராமர் விஸ்வாமித்திருடைய வேள்வியைக்காத்து அவரது எண்ணத்தைப் பூர்த்திசெய்து, திருப்திப் படுத்தியிருப்பதாகப் புராண வரலாறு கூறுகிறது என்பது எல்லோரும் அறிந்தவிஷயமாகும்.

அதுபோலவே, கலியுக இராமனாகிய நானும் தவசிரேஷ்டரான மகாத்மா காந்தியடிகள் செய்துவந்த சுயராஜ்ய வேள்வி பூர்த்தி அடையும்படி இறைவனைப் பிரார்த்தித்து வந்திருப்பதுடன், திராவிட மித்திரரும் சுயமரியாதைத் தந்தையுமாகிய பெரியார் அவர்களது நோக்கம் நிறைவேறவும் எனது இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தித்து வருகிறேன் என்பதை எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

6. பழைய இராமாயணத்தில் கண்ட இராமர் தாடகையை வதம் செய்தும், சூர்ப்பநகையை மானபங்கப்படுத்தியும், அகலிகையை சாபந்தீர்த்து வாழ்க்கைத்துணைவருடன் ஒன்று

சேர்த்தும் வந்திருப்பதாகப் புராண வரலாறு கூறுகிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயமாகும்.

அதுபோலவே, கலியுக இராமனுகிய நானும் ஆண்டவன் அருளால், இயற்கையாகவே (பந்தபாசத்தை விட்டு விலக்கு, மிகப்பாரமோ சொல்லிடுவாய் உமக்கு-என்ற அருள் வாக்குப்படி) சம்சாரபந்தத்திலிருந்து விடுதலை அடைந்தவன் என்பதையும், மற்றும் வேறு எந்தவிதமான மாயைக்கும் ஆளாகாமல் ஆண்டவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டவன் என்பதையும், சில பெண்களுக்கு திருமணம் முடித்து அவர்களை வாழ்க்கைத் துணைவருடன் ஒன்று சேர்த்துவைக்கும் புண்ணியத்தில் முக்கியபங்கு எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்பதையும் எல்லோருக்கும் தெரியப்படுத்திக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

7. பழைய இராமாயணத்தில் கண்ட இராமர் இலங்கைக்குச் சென்று இராவணனைச் சம்ஹாரம் செய்து அந்த நாட்டை விபீஷணருக்குப் பட்டம் சூட்டிவைத்திருப்பதாகப் புராண வரலாறு கூறுகிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயமாகும்.

அதுபோலவே, கலியுக இராமனுகிய நானும் காங்கிரஸ் கொள்கையையுடைய தேசபக்தர்கள் (இராவணர்கள்) அனைவரும் கடவுள் கொள்கையையுடைய தெய்வ பக்தர்களாக (இராமர்களாக) மாறும்படிக்கும், கட்சிவேற்றுமை என்னும் இராவணனைச் சம்ஹாரம்செய்தும், ஆச்சாரியார் அவர்களுக்கு கலியுக விபீஷணன் என்னும் பட்டம் சூட்டி, திராவிடநாடு என்னும் இத்தமிழ்நாட்டை ஆண்டுவருவதற்கு அருள் செய்யும்படி இறைவனைப் பிரார்த்தித்தும் வருகிறேன் என்பதை எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

8. பழைய இராமாயணத்தில் கண்ட இராமர் 14வருட காலம் காட்டில் அலைந்து கஷ்டப்பட்டுப் பிறகு, நாட்டிற்குச் செல்ல வேண்டியிருக்கும் சமயத்தில் நாட்டையும், நாட்டிலுள்ள குடிமக்களையும் மறந்து வழியில் உள்ள பழைய நண்பனது குகாச்சிரமத்தில் தங்கி விருந்துண்டு (சாப்பாட்டு இராமனுக) களித்திருந்ததாகப் புராண வரலாறு கூறுகிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயமாகும்.

அதுபோலவே, கலியுக இராமனுகிய நானும் 24-வருட காலம் பல கஷ்டங்களை அநுபவித்துவிட்டு சொந்த கிராமத்திற்குச்செல்லவேண்டி இருக்கும் சமயத்தில்,ஊரையும் உற்றுரையும் மறந்து ஆப்த நண்பராகிய ஒரு சிநேகிதரது (S. K. R) உணவு விடுதியில் விருந்தாளியாக (சாப்பாட்டு இராமனுக) இருந்து வருகிறேன் என்பதை எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

9. பழைய இராமாயணத்தில் கண்ட இராமர் தமது நாட்டைப் பகைவர்களாலும், அன்னியர்களாலும் கெடுதி நேரிடாமல் பாதுகாத்து ஆட்சிபுரிந்து நீதி செலுத்தி வந்ததாகப் புராண வரலாறு கூறுகிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயமாகும்.

அதுபோலவே, கலியுக இராமனுகிய நானும் (யுத்த காலத்தில்) பாரதநாடு என்கிற இந்தக் காட்டிற்குள் இட்லர் என்கிற மாடும், ஜப்பான் என்கிற ஆடும் வந்து நுழைந்து மக்களாகிய பயிரை அழித்துவிடாமல், தற்காப்பு என்னும் இராணுவமாகிய வேலி போடுவதில் முக்கிய பங்கு எடுத்துக் கொண்டிருந்தேன் என்பதையும் இப்பொழுது, சாதி, மத, கட்சி வேற்றுமை என்னும் அரக்கர்களாலும், அறியாமை, பொறுமை முதலிய பகைவர்களாலும், நமது நாட்டிற்குக் கெடுதி நேரிடாமல் இருக்கும்படி இறைவனைப் பிரார்த்தித்து வருகிறேன் என்பதையும், எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

10. பழைய இராமாயணம் எழுதி முடிப்பதற்கு பொருளுதவி செய்து ஆதரித்துவந்த, திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளல் அவர்கள் ஷ இராமாயணத்தில் முக்கிய இடம் பெற்றிருப்பதாகப் புராண வாலாற்றிலிருந்து தெரிய வருகிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயமாகும்.

அதுபோலவே, புதிய இராமாயணம் என்னும் இந்நூலை எழுதி அச்சிட்டு வெளியிடுவதற்குப் பொருளுதவி செய்து ஆதரித்து வரும் தமிழ் நாட்டின் தவப்புதல்வரான, புகழ் வள்ளல் உயர்திரு **பழையகோட்டை பட்டக்காரர் நல்ல சேனுபதிச் சர்க்கரை மன்றாடியார் அவர்கள்** இந்தப் புதிய இராமாயணத்தில் முக்கிய இடம் பெறுவார் என்பதை எல்லோருக்கும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன்.

(கருத்துரை.) மேற்கண்ட உதாரணங்களால் புதிய இராமாயணம் இப்பொழுது நடைபெற்று வருகிறதென்பதும், இதனால் தான் எனது சுயமரியாதைக் குருவாகிய பெரியார் அவர்களும், மாஜி தோழர்களும், புதிய சட்டை அணிபவர்கள் பழைய சட்டையை எறிந்துவிடுகிற மாதிரி, பழைய இராமாயணத்தைக் கொளுத்திவிட வேண்டுமென்று கூறுவது ஒருவகையில் பொருத்தமாக இருப்பினும், பழைய சட்டைகளும் சில ஏழைகளுக்கு உபயோகப்படுவதுபோல, பழைய இராமாயணத்திலுள்ள கவிதாநயங்களும், நீதிகளும், அறிவிற்குறைந்த எம்போன்ற ஏழைகளுக்கு (இந்நூலுக்கு உதாரணம் காட்டியபடி) உபயோகப்படுமாதலால், அதனையும் வைத்திருக்க வேண்டியது அவசியம் என்பதையும், பழைய இராமாயணத்தில் ஒரு இராமரும் ஒரு சீதையும் ஒரு கூனியும் ஒரு இராவணனும் இருந்ததாகவும், அசோகமரத்தடியில் அழுது புலம்பிக்கொண்டிருந்த அந்த ஒரு சீதையைச் சிறை மீட்பதற்கே, அந்த இராமருக்கு ஆயிரக்கணக்கான வானரப்படைகள் தேவையாயிருந்ததாகப் புராண வாலாற்றிலிருந்து தெரிகிறதென்பதையும், ஆனால் இப்பொழுது நமது

நாட்டில் ஆயிரக்கணக்கான கூனிகளும், ஆயிரக்கணக்கான இராவணர்களும், ஆயிரக்கணக்கான சீதைகளும் தோன்றியிருப்பதால், தரித்திரம் என்னும் அந்த இராவணன் கையில் சிக்கி, உண்ணவும் உடுக்கவும் இருக்கவும் வசதியின்றி அரசமரம் ஆலமரம் வேப்பமரம் வேலாமரம் முதலிய மரத்தடிகளில் இருந்து தவித்துக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான சீதைகளைச் சிறை மீட்பதற்கு, ஆயிரக்கணக்கான இராமர்(தெய்வபக்தர்களும்)களும், லட்சக்கணக்கான வாலிப வீரர்களும் முன்வரவேண்டும் என்று பிரார்த்தித்துக்கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆனால் மேற்கண்ட உதாரணங்களுக்கு மாறாக பழைய காவியத்தில் கண்ட இராமனைத் தாழ்த்தியும், இராவணனை உயர்த்தியும் புதிய **இராவண காவியம்** எழுதியுள்ள ஒரு புலவர், மாணிக்கக்கல்லைத் தீட்டத் தீட்ட அதன் ஒளி அதிகமாவது போலவும், பெரியார், பிள்ளையாரை உடைக்க, உடைக்க நாட்டில் பிள்ளையார் வழிபாடு அதிகமாவது போலவும் இராமனுடைய புகழ் அதிகமாகப் பிரகாசிக்கும் என்பதை உணரவேணுமாயும், இராவணனைப் புகழ்ந்து எழுதியிருப்பதற்காக தற்கால இராவணர்களாகிய தேசபக்தர்கள் அனைவரும், (அந்த இராவண காவியத்தை) ஆதரிக்காமல் விட்ட போதிலும் அதை எழுதியுள்ள புலவரின் அறிவுத் திறமைக்காக மெச்சிப் போற்றக் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. காங்கிரசும், காந்தியடிகளும்.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆண்டவன் காங்கிரஸ்ஸ்தாபனம் என்ற கற்பகவிருட்சமாகிய வாழைமரத்தை நமதுநாட்டில் உற்பத்தி செய்து திலகர், லாலா லஜபதிராய், மாளவியா போன்ற அரும் பெரும் தேசத்தொண்டர்களைக் கொண்டு அந்த மரத்திற்கு உரமிட்டுத் தண்ணீர் பாய்ச்சிவர ஏற்பாடு செய்திருந்தார் என்பதும், பிறகு நமது நாடு

செய்துள்ள மாபெரும் புண்ணியத்தாலும், அயல் நாட்டார் செய்துள்ள அக்கிரமத்தாலும் காந்தியடிகள் என்னும் பெரியாரைத் தோற்றுவித்து அந்த வாழைமரத்திற்குத் தக்கவாறு ஊக்கம் என்னும் எருவிட்டு பக்தி என்னும் நீர் பாய்ச்சி வளர்த்து வரும்படி அருள் புரிந்தார் என்பதும், அதன் பயனாக அந்த கற்பக விருட்சமானது செழித்து வளர்ந்தோங்கி அரசியல் சுதந்திரம் என்கிற பழக்குலையை நமது நாட்டிற்குக் கொடுத்துதவிற்று என்பதும், ஆனால் அது நன்றாக முற்றிப் பழுக்குமுன் நமது நாட்டின் துரதிர்ஷ்ட வசத்தால் அதற்கு உரமூட்டி வளர்த்த காந்தியடிகளும் ஒரு துராத்மாவால் கொலையுண்டு மாண்டு விட்டார் என்பதும் எல்லோரும் அறிந்த விஷயமாகும். ஆகவே, அந்த வாழை மரத்திற்கு இப்பொழுது வாழையடிவாழையாய், கம்யூனிஸம், சோஷலிஸம் போன்ற பல கன்றுகள் முளைத்து அந்தக்குலை பழுத்துப் பயன் தருவதற்கு வேண்டிய சத்தை அதனிடம் சேரவொட்டாமல் உறிஞ்சி (தடுத்து) வருகின்றனவென்பதையும், ஆதலால் இனிமேல் அந்தக் கற்பக விருட்சமாகிய காங்கிரஸ் ஸ்தாபனத்தால், நமது நாட்டிற்கு எந்தவிதமான பிரயோஜனமும் ஏற்படாதென்பது நன்றாகத் தெரியவருகிறது என்பதையும், ஆகவே அதைவிட மேலான பலன் தரக்கூடிய ஒரு புதிய ஸ்தாபனம் (விருட்சம்) நமது நாட்டிற்குத் தேவையென்றால் அதுதான் கடவுள் கொள்கையாகிய ஆத்மீக ஸ்தாபனம் என்னும் அருள் விருட்சம் என்பதையும், ஆதலால் இனிமேல் அந்த அருள்விருட்சத்திற்கு ஒவ்வொரு தேச பக்தர்களும் முன்வந்து அன்பு என்னும் நீர் பாய்ச்சி, அறிவு என்னும் உரமூட்டி வளர்த்தால் தான், அது நமது நாட்டிற்கு ஆத்ம சுதந்தரம் என்னும் பழமாகிய பலனைத்தரும் என்பதையும் சிறியேன் வணக்கத்துடன் தெரிவித்துக்கொண்டு ஒவ்வொரு தேச பக்தர்களும் (இராஜாஜியைப் போன்று) தெய்வ பக்தர்களாக மாறும்படியாகவும் காங்கிரஸ் கொள்கையை அனுஷ்டித்து வருபவர்கள் அனைவரும் கடவுள் கொள்கையை அனுஷ்டித்து வரும்படியாகவு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தவிர, சூரியன் உதயமாகும் வரையில் சந்திரனுடைய ஒளி பிரகாசித்துக் கொண்டிருப்பது போலவும், சூரியன் உதயமானவுடன் சந்திரனுடைய வெளிச்சம் குன்றி விடுவது போலவும், காங்கிரஸ் கொள்கைக்கும், காந்தீய நெறிக்கும் மேலான மார்க்கம் ஒன்று நமது நாட்டில் ஏற்படாதவரை, அவைகளுக்குச் செல்வாக்கும், மதிப்பும் இருந்து வந்தது வாஸ்தவமேயானபோதிலும் அதற்கும் மேலான பலனைத் தரக்கூடிய சக்தி வாய்ந்த ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டவுடன் காங்கிரஸ் கொள்கைக்கும், காந்தீய நெறிக்கும் நாட்டில் செல்வாக்குக் குறைந்து போய்விடுமென்பது நிச்சயம் என்பதையும், அந்த ஸ்தாபனம் தான் **கடவுள் கொள்கையாகிய ஆத்மீக மார்க்கம்** என்பதையும் அடியேன் வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நிற்க, எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியைக் கண்டுபிடித்து அதன்மேல் மூவர்ணக் கொடியை நாட்டியுள்ள தேன்சிங் என்னும் வீரரின் மாபெரும் முயற்சியை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருந்த போதிலும், அவற்றால் நமது நாட்டு மக்களுக்கு எந்தவிதமான பிரயோஜனமும் இல்லையென்பது எப்படி வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறதோ, அது போலவே, மாபெரும் முயற்சி செய்து அரசியல் சுதந்திரம் ஏற்படுத்திக்கொடுத்து தேசியக்கொடியை நிலைநாட்டியிருப்பதற்காக காந்தியடிகளை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருந்த போதிலும், அந்த அரசியல் சுதந்திரத்தால் நமது நாட்டு மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படாதென்பதை ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்துப் பார்த்து உணரவேணுமாகப் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

உதாரணமாக, சிறியேன் ஆங்கில ஆட்சியில் (ஆங்கிலம் தெரியாமலிருந்தும்) ஆபீஸர் கிரேடில் (ஜுனியர் இன்பர்மேஷன் ஆபீஸர்) உத்தியோகம் பார்த்து சுயமரியாதையுடன் வாழ்க்கை நடத்தி வந்திருக்கிறேன் என்பதையும், இப்பொழுது ஒரு காங்கிரஸ் அபிமானியாகவும், அகிம்சையில்

காந்தியடிகளைவிட ஒருபடி உயர்ந்தவனாகவும் இருந்துங்கூட, காங்கிரஸ் ஆட்சியில் எனக்கு எந்தவிதமான அனுகூலமும் இல்லாமல் இருப்பதோடு, காங்கிரஸ் அபிமானிகளுடைய ஆதரவும் (S K R. நீங்கலாக) இல்லாமல் இருந்து வருகிறது என்பதையும், இதிலிருந்து ஆண்டவன் இவ்வாத்மா (பரமாத்மா) வைப் படைத்து இருப்பதின் நோக்கம் காங்கிரஸ் கொள்கைக்கும் காந்தீய நெறிக்கும் மேலான கடவுள் கொள்கையாகிய ஆத்மீக மார்க்கத்தை உலகத்தில் நிலைநாட்டுவதற்காகவும் அதாவது (எவரெஸ்ட் சிகரத்தைக் கண்டுபிடித்தமாதிரி) சோதி (அருள்) மலையின் சிகரத்தைக் கண்டுபிடித்து அதன்மேல் பக்தி ஞான வைராக்யங்களாகிய மூவகைக் கொடியையும் நிலைநாட்டுவதற்கேயாகும் என்பதையும் அப்படி நிலைநாட்டுவதற்கு மலையேறும் கோஷ்டியாரைவிட எத்தனையோமடங்கு அதிகமான சிரமமும் முயற்சியும் தேவை என்பதையும் அந்த சோதி (அருள்) மலையின் சிகரத்தை அடைந்தவர்கள் தான் பேரானந்தப் பெருவாழ்வு எய்தமுடியும் என்பதையும், அத்துடன் மற்றவர்களுக்கும் வழிகாட்டியாக இருந்து உலகத்திற்கு நன்மை செய்யமுடியும் என்பதையும் ஆண்டவன் சோதனையால் 24 வருடகாலம் அடைந்த கஷ்டத்திற்குப் பின் சிறியேனுக்கு ஏற்பட்டிருக்கும் அனுபவத்தின் பயனாகவும் முயற்சியின் பயனாகவும் பூர்வம் செய்த தவப்பயனாகவும் தான் அந்த சோதி (அருள்) மலையின் சிகரத்தைக் கண்டுபிடிக்க முடிந்தது என்பதையும் ஆகவே வேறு எத்தகைய பக்தகோடிகளாலும் பார்க்கமுடியாத பரமனை, அருள்நெறிக் கூட்டத்தாலும் அணுகமுடியாத ஆண்டவனை, காந்தியடிகளும் காணப்பெறாத கடவுளை, இந்த இருபதாம் நூற்றாண்டில் கண்டறிந்த பெருமை இவ்வேழைக்கு உண்டென்பது மெய்யானால், அதற்கு முக்கிய காரணம் தெய்வ பக்தி ஒன்றேயாகும் என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றும், காங்கிரஸ் கொள்கையாலும் காந்தியடிகளாலும் ஏற்பட்டுள்ள அரசியல்சுதந்தரமானது போலிச்சுதந்தர

மாகுமேதவிர உண்மையான சுதந்தரம் அல்லவென்பதும், அந்தப் போலி சுதந்தரத்தால் இதுவரை நமது நாட்டிற்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லையென்பதும் ஆனால் அதற்குப்பதிலாக ஆடு மேய்க்கத் தெரியாதவனுக்கும் அரசியல் பேச உரிமை கிடைத்திருக்கிறதென்பதும், மாடு மேய்க்கத் தெரியாதவனும் மந்திரியாவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறதென்பதும், சாணி எடுக்கத் தெரியாதவனும் (பணம் இருந்தால்) சட்டசபை மெம்பர் ஆவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறதென்பதும் எல்லோரும் அறிந்தவிஷயமாகும். ஆகையால் உண்மையான சுதந்தரம் ஏற்பட்டால் தான் நமது நாடு முன்னேற்றம் அடையமுடியும் என்பதும், அதுதான் கடவுள் கொள்கையாகிய ஆத்ம சுதந்தரம் ஆகுமென்பதும் ஆத்ம சுதந்தரம் இருந்தால்தான் ஒவ்வொருவரும் சுயமுயற்சியினால் முன்னேற்றம் அடையமுடியும் என்பதும் அடியேனது கொள்கையாதலால் அந்த ஆத்ம சுதந்தரத்தைப் பெறுவதற்கு ஒவ்வொரு தேசபக்தர்களும் ஆத்மீக மார்க்கத்தைக் கடைப்பிடித்து நாட்டின் நலனைக்கருதி தெய்வபக்தியைப் போதித்து சன்மார்க்க நெறியைப் பரப்பி ஆண்டவனது திருவருளுக்குப் பாத்திராகவேணுமாய் எல்லோருடைய திருவடிகளிலும் இறைஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

6 காந்தியடிகளும், ஈ. வெ. ராவும்.

மேற்கண்ட இரு மாபெரும் தலைவர்களும், நமது நாட்டிற்கு இருகண்கள் போன்றவர்கள் (ஞானக்கண் இல்லாதவர்கள்) என்பதும்,காந்தியடிகள் வடநாட்டில் தோன்றியுள்ள ஒரு பெரியார் என்பதும், ஈ. வெ. ரா. தமிழ்நாடாகிய இத் தென்னாட்டில் தோன்றியுள்ள ஒரு பெரியார் என்பதும், காந்தியடிகள் அரசியல் சுதந்தரத்திற்காகவே தமது வாழ்க்கையை அர்ப்பணித்திருந்ததுபோல், ஈ. வெ. ராவும் மக்களின் சுயமரியாதைக்காகத் தனது வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கிறார் என்பதும் எல்லோரும் அறிந்த விஷய

மாகும். ஆனால் ஒருவகையில் இருவரும் தீவிர தேசபக்தர்களாகவும் தியாகிகளாகவும் இருந்தபோதிலும், ஒருவகையில் துரோகிகள் என்று சொல்வதற்கும் சிறிது பொருத்தம் இருக்கிறதென்பதையும், அதாவது தேசபக்தியிற் சிறந்தது இராஜபக்தியும், அதைவிடச் சிறந்தது தெய்வபக்தியும் எப்படியாகுமோ அதுபோலவே, தேசத்துரோகத்திற் பெரியது இராஜத்துரோகமும் அதைவிடக்கொடியது தெய்வத்துரோகமும் ஆகுமென்பது சிறியேனது தாழ்மையான அபிப்பிராயம் ஆகும் என்பதையும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தவிர, அன்னிய ஆட்சியாளர்களாகிய ஆங்கிலேயர் வெளியேறிவிட்டால், நமதுநாடு நல்ல நிலைமை எய்திவிடும் என்ற காந்தியடிகளின் சித்தாந்தப்படியே ஆரியர்களும் (பார்ப்பனர்கள்) அவர்களால் போற்றப்படும் ஆலயங்களும் ஒழிந்துவிட்டால் மக்கள் சுயமரியாதையோடு வாழமுடியும் என்பது பெரியாரது சித்தாந்தமாகும். ஆகவே இவர்கள் இருவரும் ஒவ்வொரு வகையில் உண்மையான தேசாபிமானிகள் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தாலும் ஒவ்வொருவகையில் துரோகிகள் என்று கூறுவதை யாரும் மறுக்கமுடியாது என்பதே அடியேனுடைய தாழ்மையான அபிப்பிராயம் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, இத்தகைய போலிப் பக்தர்களாகிய புத்திசாலிகளை நமது நாட்டவர் (கடவுளைக் கூட மறந்துவிட்டு) தெய்வங்களாகப் பாவித்துப் போற்றிப் புகழ்ந்து வருவது காரணமாகத்தான் இன்று நமது நாட்டில் பசியும், பட்டினியும் அதிகமாகி தரித்திரமும், பஞ்சமும் தாண்டவமாடிக்கொண்டு இருக்கிறதென்பதையும், ஆதலால் இனிமேலாவது பொதுமக்கள் இவ்வுண்மையை உணர்ந்து ஆண்டவனை வழிபட்டு மேற்கண்ட துன்பங்களினின்றும் நீங்கி விடுதலை அடைய வேணுமாய் எல்லோரையும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உதாரணமாக, சிறியேன் ஆண்டவன் சோதனையின் பயனாகவும், தீவினைப்பயனாகவும் ஈ. வெ. ரா. அவர்களின்

சுயமரியாதைக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்ததின் பலனாக ஒரு சிறிது ஆண்டவனை (முருகனை) மறந்து அவமதித்த குற்றத்தால், உத்தியோகத்தையும் இழந்து உயிருக்குயிரான வாழ்க்கைத் துணைவியையும் இழந்து பல தொல்லைகளை அனுபவிக்கவேண்டி நேரிட்டது என்பதையும்,பிறகு பூர்வம் செய்த தவப்பயனாக நல்லறிவு தோன்றி ஆண்டவனை (முருகனை) சதா வழிபட்டு வருவதின் காரணமாகத்தான் இப்பொழுது எல்லாவித துன்பங்களும் நீங்கப் பெற்று எந்த மகாத்மாவும் அடையமுடியாத ஆத்மலாபத்தை அடைந்திருக்கிறேன் என்பதையும், இதுபோலவே அரசியல் இயக்கத்தின் பேராலும், சமூக இயக்கத்தின் பேராலும் மக்கள் எவ்வளவோ குற்றங்களுக்கு பாத்தியப்பட்டு அளவிடமுடியாத துன்பங்களை அநுபவித்துக்கொண்டு வருகிறார்கள் என்பதையும், ஆகவே அத்துன்பங்களிலிருந்து விடுதலையடைவதற்கு ஆத்மீக மார்க்கம் ஒன்றைத் தவிர வேறு எந்த மார்க்கத்தாலும் விமோசனம் ஏற்படாதென்பதையும் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளவேண்டியது எனது கடமையாகும்.

நிற்க, "நாட்டுக்கு நல்லரசு ஏற்பட்டாலும் தோட்டிக்குப் புல்லறுக்கும் வேலை தீராது" என்ற பழமொழிப்படியும், "நிதியும் கணவனும் நேர்படினும் தம்தம் விதியின் பயனே பயன்" என்றநீதிப்படியும்,எந்த அரசாங்கம்ஆண்டபோதிலும் மக்களது சுகதுக்கங்களுக்கு அவரவர் செய்துள்ள நல்வினை தீவினையாகிய புண்ணிய பாவங்களே முக்கிய காரணம் ஆகும் என்பதை காந்தியடிகள் உணர்ந்திருந்தும். அதை நடைமுறையில் அனுஷ்டிக்காமல்போனது அவரது தவக்குறைவே முக்கிய காரணம் ஆகுமென்பதையும், இதுபோலவே, நமது நாட்டில் உள்ள மக்களது ஏற்றத் தாழ்வுகளுக்கும் சுகதுக்கங்களுக்கும் புண்ணிய பாவங்களே முக்கிய காரணமாகும் என்பதையும், அந்தப் புண்ணிய பாவங்களுக்கு மூலகாரணமாயிருந்துவருவது கடவுள் நம்பிக்கையே ஆகுமென்பதையும் எனது சுயமரியாதைக் குருவாகிய பெரியார் அவர்கள்

உணராமல் இருந்து வருவது அவருடைய தவக்குறைவே காரணமாகும் என்பதையும் தாழ்மையுடன் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன்.

மற்றும் காந்தியடிகள் அரசியல் விஷயத்தில் எடுத்துக் கொண்ட முயற்சியை ஆத்மீகத்துறையில் உபயோகப்படுத்தியிருந்தால் அவரது ஆத்மா சாந்தியடைந்திருப்பதோடு நாடும் நல்ல நிலைமை அடைந்திருக்கும் என்பதையும், இது போலவே பெரியார் அவர்களும் ஆரிய திராவிடப் போட்டியில் செலவழித்து வரும் நேரத்தை ஆண்டவன் ஒருவர் உண்டு என்னும் விஷயத்தில் உபயோகப்படுத்தி வந்தால் அவருடைய ஆத்மாவானது (சீவன்) கடைத்தேறுவதுடன் நாட்டிலுள்ள மக்களும் நன்கு சீர்திருந்தப்பெற்று முன்னேற்றம் அடைவார்கள் என்பதையும் சிறியேன் தெரியப் படுத்திக் கொள்வதோடு, உண்மையில் நம் நாடு இதரநாடுகளைப்போல், எல்லாவகையிலும் முன்னேற்றம் அடைய வேண்டுமானல் நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பங்களிலும் ஒவ்வொரு ஆங்கிலேயரையும், ஆச்சாரியார் போன்ற ஒவ்வொரு பிராமணனையும் வைத்துப் பூசித்து வரவேண்டும் என்பதுதான் அடியேனது தாழ்மையான அபிப்பிராயம்ஆகும் என்பதையும், உதாரணமாக சிறியேன் இந்த இருபதாம் நூற்றுண்டில் காந்தியடிகளும் காண முடியாத கடவுளைக் கண்டு பேரானந்தம் எய்தியிருப்பதற்கு (1929ல்) கல்வி இலாகாவில் அதிகாரியாக இருந்துவந்த ஒரு ஆங்கிலேய அம்மையாரிடம் கற்றுக்கொண்ட உபதேசம்தான் முக்கிய காரணமாகுமென்பதையும், எல்லோருக்கும் வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

7. கட்சிப்பிரிவும், கருத்து வேற்றுமையும்.

நமது நாட்டில், தேசபக்தியின் பேரால் ஏற்பட்டுள்ள பல்வேறு அரசியல் இயக்கங்களில் மிகப்பழமை வாய்ந்ததும், முதன்மை வாய்ந்ததும், காந்தியடிகள் போன்ற அரும்

பெரும் தேசாபிமானிகளால் ஆதரிக்கப்பட்டு வந்ததுமாகிய காங்கிரஸ் ஸ்தாபனம் ஒன்றுதான் ஆரம்பத்தில் ஏற்பட்டது என்பதும் பிறகு நாளாவட்டத்தில் அந்த காங்கிரஸ் ஸ்தாபனம் என்கிற கற்பக விருட்சத்திலிருந்து **சுயநலம்** என்ற காற்றடித்து ஒடிந்து விழுந்துபோன கிளைகளே இப்பொழுது கம்யூனிஸம், சோஷலிஸம், திராவிடக் கழகம் முதலிய இயக்கங்களாக மாறியிருக்கிறதென்பதும், சில கட்சிகள் சாதிப் பெயராலும், மதத்தின் பெயராலும், மொழியின் பெயராலும், தொழிலின் பெயராலும் ஏற்பட்டு வளர்ந்து வருகின்றனவென்பதும் எல்லோரும் அறிந்த விஷயமாகும். ஆகவே தேசபக்தியின் பொருட்டு ஏற்பட்டுள்ள, இக் கட்சிகள் அனைத்தும் இப்பொழுது ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டும், தாக்கிக்கொண்டும் வருவதினால்தான் நாட்டில் குழப்பமும், அராஜகமும் ஏற்பட்டு இருக்கின்றன என்பதும்,எந்தக்கட்சியாக இருந்தபோதிலும் நாட்டுக்கு நன்மையான காரியங்களைச் செய்யும் விஷயத்தில் எல்லோரும் ஒன்றுபட்டு இருந்தால்தான்,எந்தக் காரியங்களையும் சுலபமாகச்செய்யச் சாத்தியப்படும் என்பதும்,ஒற்றுமை இல்லாத காரணத்தால் வீண் மனஸ்தாபங்களும் பண விரயமும் காலவிரயமும்தான் ஏற்படுமே தவிர நன்மையுண்டாகமாட்டாது என்பதும், உதாரணமாக நமது நாட்டில் காங்கிரசின் பேரால் எத்தனை மாநாடுகள் கூடியிருக்கின்றன, எத்தனை பொதுக்கூட்டங்கள் நடந்திருக்கின்றன, எத்தனை கோடி பணம் செலவாகியிருக்கிறது, எத்தனை குடும்பங்கள் கட்சிக்கொள்கையில் ஈடுபட்டு சீர்குலைந்திருக்கின்றன என்பதை சிந்தித்துப்பார்த்தால், எவ்வளவோ கோடி ரூபாய்கள் செலவழிந்து இருப்பதும் திருப்பூர் குமரன்போன்ற எத்தனையோ வீரர்கள் உயிரிழந்து இருப்பதும், ஈரோடு ஆர். சி. கிருஷ்ணன் போன்ற எத்தனையோ காந்தியவாதிகள் (குல்லா அபிமானியும்கூட) பொருளையிழந்து எந்தவிதமான தொழிலும் செய்யத்தகுதியற்று வாழ்க்கை நடத்த முடியாத நிலைமையில் இருந்து வருகிறார்கள் என்பதும் எல்லோருக்கும் தெரியக்கூடிய

விஷயமாகும். இதுபோலவே இதர கட்சிகளிலும், பலர் பலவிதமான கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் ஆளாகித் தான் இருக்கிறார்கள் என்பதையும், உதாரணமாக ஆண்டவன் சோதனையின் பலனாக ஏற்கனவே சொன்னபடி சிறியேன் ஒரு சிறிது ஆண்டவனை (முருகனை) அவமதித்த குற்றத்தால் உத்தியோகத்தையும் இழந்து, வாழ்க்கைத் துணைவியையும் இழந்து, பலகஷ்டங்களை அநுபவிக்க நேரிட்டது என்பதையும், எம்போன்று இன்னும் எத்தனையோபேர், இம்மாதிரி தெய்வத் துரோகத்திற்கும், இராஜத் துரோகத்திற்கும் ஆளாகி அவஸ்தைப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதையும், காந்தியடிகள் கொலையுண்டதுகூட இராஜத்துரோகம்தான் ஆகுமென்பதையும் எல்லோருக்கும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், காங்கிரஸ் இயக்கத்தால் இப்பொழுது நமது நாடு, அரசியல் விடுதலை அடைந்திருக்கிறது என்ற ஒரு பெருமையைத் தவிர மக்கள் அறியாமையிலிருந்தோ, வறுமைப்பிணியிலிருந்தோ ஒரு அணுவளவும் விடுதலை அடையாமல் இருப்பதோடு, அன்னிய ஆட்சியில் இருந்த நிலைமையைக் காட்டிலும் இப்பொழுது போட்டியும் பொறாமையும் அதிகப்பட்டு, பசியும் பட்டினியும் அதிகமாகி, நாளுக்குநாள் தரித்திரமும் பஞ்சமும் தாண்டவமாடிக் கொண்டுதான் வருகின்றன வென்பது எல்லோருக்கும் தெரியக்கூடிய விஷயமாகும். ஆனால் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவுக்கு சில நபர்கள் மாத்திரம், புகை வண்டியிலும் மோட்டாரிலும் விமானத்திலும் அங்கும் இங்கும் ஓடி திறப்பு விழாக்கள் நடத்துவதும், துவக்க விழாக்கள் நடத்துவதும், உபயோகமில்லாத ஸ்தாபனங்களைப் பார்வையிடுவதும், தங்கள் கட்சிக் கொள்கைகளைப் புகழ்வதுமாக இருந்துவருகிறார்கள். ஆகவே இந்தத் தேச பக்தர்கள் அனைவரும், "கஞ்சி குடிப்பதற்கிலார் அதன் காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்" என்று கூறியுள்ள

திரு பாரதியின் கவிதைப்படி காரண காரியங்களையுணர்ந்து நமது நாட்டிற்கு உடனடியாகச் செய்யவேண்டிய சீர்திருத்தம் இன்னதென்பதையுணராமல், நோயொன்று இருக்க மருந்தொன்று கொடுக்கும் மாதிரி, அவசியமான காரியங்களைச் செய்யாதிவிட்டு அனுவசியமான காரியங்களைச் செய்துகொண்டுவருவது வருந்தத்தக்க விஷயமாகும். ஆகவே நமது நாட்டின்மீது உண்மையான தேசபக்தி இவர்களுக்கு இருப்பின் (எகிப்து மன்னன் நகீப் மாதிரி) காங்கிரஸ் முதல் கம்யூனிஸ்டுவரை உள்ள எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட்டு நமது நாட்டு மக்கள் கல்வி, கைத்தொழில், பொருளாதாரம், சுகாதாரம், நாகரீகம் முதலிய எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து வாழ்வதற்கு வழிவகை செய்யவேணுமாய் சகல கட்சியினரையும் அடி வணங்கிக் கேட்டுக்கொள்வதோடு கட்சி வேற்றுமை என்னும் இராவணன் ஒழிந்தால்தான் பாரத நாடு என்கிற சீதை விடுதலை பெற்று நல் வாழ்வு வாழ முடியும் என்பதையும், உதாரணமாக, சிறியேன் இதற்கு முன்பு காங்கிரஸ் ஸ்தாபனத்தில் ஒரு காரியதரிசியாகவும், சோஷலிஸ்டு கட்சியில் மெம்பராகவும் கம்யூனிஸ்டு கட்சியின் அபிமானியாகவும் திராவிட கழகத்தின் ஆதரவாளனுகவும் இருந்தபோதிலும், இப்பொழுது எந்தக்கட்சியிலும் சேராமலும், எல்லாக்கட்சிகளுக்கும் வேண்டியவனுகவுள்ள ஒருசமரசக்கொள்கையுடையவனுயிருந்துவருகிறேன் என்பதையும், அது காரணமாகத்தான் ஏற்கனவே கூறியபடி காந்தியடிகளும் காணப்பெருத கடவுளைக் காணும் பாக்கியம் எனக்கு எளிதில் கிடைத்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொண்டு எல்லோரும் இம் மார்க்கத்தைப் பின்பற்றி நடந்து நாட்டுக்கு நன்மை செய்து ஆண்டவனது திருவருளுக்குப் பாத்திரராகும்படி பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

8. சாதியும் சமயமும்.

சாதி என்பது தொழிலால் ஏற்பட்டபெயர் என்பதும் சமயம் (அல்லது மதம்) என்பது பகுத்தறிவுடைய மக்கள் மதித்துச் செய்துள்ள ஒரு கொள்கை என்பதும் தாத்பரிய மாகும். இதில் முதலாவதாக, சாதியைப்பற்றி சற்று சிந்தித்துப் பார்ப்போமானல் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்" என்ற வள்ளுவர் வாக்குப்படி, மக்கள் அனைவரும் பிறப் பினுல் ஒரே தன்மையுடையவர்களாக இருந்த போதிலும், அவரவர் செய்துள்ள நல்வினை தீவினையாகிய புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி, அறிவு ஆற்றல் முதலிய சிறப்பு வகையால், வேறுபட்டவர்களாகவே காணப்படுகிருர்கள் என்பதும், ஆதலால் கருமத்தால் சாதியன்றி, வருணத்தால் சாதியில்லை என்ற பழமொழிப்படி, அவரவர் செய்துவரும் தொழில்களே, சாதிப்பிரிவினைக்கு முக்கிய காரணம் ஆகுமென்பதும், இதனையொட்டியே ஆதியில் பிரம்ம க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் நான்கு சாதிகள் ஏற்பட்டிருக்கவேண்டும் என்பதும், பிறகு தொழில்கள் அதிகமாக வளர வளர, சாதிப்பிரிவினைகளும் அதிகமாக வளர்ந்துகொண்டே வருகின்றனவென்பதும் எல்லோரும் அறிந்த விஷயமாகும். ஆனல் இப்பொழுது எந்தத்தொழில் யாருக்குச் சொந்தம் என்னும் முறையில், மாறுபட்டு வருகிறதென்பதையும் உதாரணமாக குடியானவன்மகன் குடியானவனுகவே இருக்கவேண்டியதில்லை என்பதையும், குருக்கள் மகன் குருக்களாகவே இருக்கவேண்டியதில்லை என்பதையும், இதுபோலவே ஆண்டி மகன் ஆண்டியாகவும், ஆசிரியன் மகன் ஆசிரியனுகவும், வைத்தியன் மகன் வைத்தியனுகவும், வக்கீல் மகன் வக்கீலாகவும், தலையாரி மகன் தலையாரியாகவும், தாசில்தாரன் மகன் தாசில்தாரனுகவும் இருக்கவேண்டிய தில்லை என்பதையும், இதுபோலவே பிராமணன் மகன் பிராமணனுகவும், க்ஷத்திரியன் மகன் க்ஷத்திரிய னுகவும், வைசியன் மகன் வைசியனுகவும், சூத்திரன் மகன்

சூத்திரனாகவும், சக்கிலியன் மகன் சக்கிலியனாகவும், பறையன் மகன் பறையனாகவும், வண்ணான் மகன் வண்ணானாகவும், நாவிதன் மகன் நாவிதனாகவும், செட்டியார் மகன் செட்டியாராகவும், முதலியார் மகன் முதலியாராகவும், கவுண்டன் மகன் கவுண்டனாகவும் இருந்து வரவேண்டுமென்ற நியதி கிடையாது என்பதையும் எல்லோரும் உணர்ந்துகொள்ளும்படி பிரார்த்திக்கிறேன்.

உதாரணமாக, சிறியேன் ஆரம்பத்தில் கொங்கு வேளாளர் என்னும் விவசாயத் தொழிலையுடைய குடியானவர் சமூகத்தில் பிறந்து வளர்ந்தேன் என்பதையும், பிறகு கல்வி கற்று ஆசிரியனாக இருந்து வந்திருக்கிறேன் என்பதையும், இப்பொழுது ஆண்டவன் அருளினாலும், அன்பின் முதிர்ச்சியாலும் உலகத்திலுள்ள எல்லா மடாதிபதிகளையும், மதத்தலைவர்களையும் விலைக்கு வாங்கும்படியான அளவு ஆற்றலுடையவனாயிருந்து வருகிறேன் என்பதையும், ஆகவே என்னை இப்பொழுது தொழிலைக்கொண்டு இன்ன சாதியென்று ருசுப்படுத்துவது எவராலும் முடியாத காரியம் என்பதையும் வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நிற்க, நமது நாட்டுப் பெரியார்களில் ஒருவராகிய காந்தியடிகள், ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு அரிஜன் என்று பெயர் சூட்டி அழைத்து வந்தாலும், இன்னொரு பெரியாராகிய ஈ. வெ. ரா. அவர்கள், ஒரு நாட்டில் பிறந்து வளர்ந்து ஒரே மொழியில் பேசி வருகிறவர்களை ஆரியன் என்றும், திராவிடன் என்றும் வேறுபாடு உண்டாக்கி வைத்து உயர்வு தாழ்வு கற்பித்து வருவதினாலும், சாதிப் பிரிவுகளும், வேற்றுமைகளும் பின்னும் அதிகமாக வளர்ந்து கொண்டே போகின்றன வென்பதையும் ஆகையால் சாதிப் பிரிவினையும், தீண்டாமையும் அறவே ஒழியவேண்டுமானால் முதலாவதாக அரிஜன் என்ற வார்த்தையையும், ஆரியன் திராவிடன் என்ற பதங்களையும் யாரும் உபயோகிக்காமல் இருக்கவேண்டும் என்பதையும் எல்லோருக்கும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இரண்டாவதாக, சமயம் அல்லது மதம் என்பதைப் பற்றி சிறிது ஆராய்ந்து பார்ப்போமானால் நமது நாட்டில் இந்து மதம், கிறிஸ்து மதம், மகம்மதிய மதம் போன்ற பல வகை மதங்கள் இருந்து வருகிறதென்பதும், இவற்றுள் இந்து மதங்களாகிய சைவம், வைஷ்ணவம் இரண்டும் பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பே தோன்றியுள்ளவை என்பதும், கிறிஸ்துமதம் இயேசு என்னும் ஒரு மகானால் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டவை என்பதும், மகம்மதியமதம் முகம்மதுநபி என்னும் ஒரு பெரியாரால் சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டவை என்பதும் எல்லோரும் அறிந்த விஷயமாகும். இவற்றில் முதலாவதாக, சைவமதம் என்னும் சொல்லுக்கு (அன்பே சிவம் என்றபடி) சிவமதம் அல்லது அன்பு மதம் என்பதுதான் சரியான தாத்பரியமாகும் என்பதும் ஆகவே ஆண்டவன் (சிவன்) ஒருவன் உண்டு என்று நம்பி எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி சிவனை வணங்கி வருவது சிவ மதம் என்பதும், விஷ்ணு ஒருவர் உண்டு என்று நம்பி அவரை வழிபட்டு வருவது விஷ்ணு மதம் என்பதும், இதுபோலவே இயேசுநாதருடைய கொள்கையைப் பின்பற்றி கர்த்தர் ஒருவர் உண்டு என்று நம்பி, அவரை வணங்கிவருவது கிறிஸ்து மதம் என்பதும், மகமது நபியின், கொள்கையைப் பின்பற்றி அல்லா ஒருவர் உண்டென்று நம்பி அவரைத் தொழுது வருவது மகம்மதியமதம் என்பதும் எல்லோரும் அறிந்த விஷயமாகும். ஆனால் சைவசமயம் என்னும் அன்பு நெறியை உண்மையாக அநுசரித்து நடப்பவர்கள் யாராக இருந்தாலும் சரி, அதாவது கிறிஸ்தவர்களானாலும் சரி, மகம்மதியர்களானாலும் சரி வைஷ்ணவர்களானாலும் சரி அவர்கள் எல்லோரும் உண்மையான சைவர்கள் ஆவார்கள் என்பதையும், அன்பு நெறிக்கு விரோதமாக நடந்துகொண்டு திருநீறு பூசுவதினாலோ, சிவன் கோவிலுக்குப் போவதினாலோ (வெறும் வேடத்தால் மட்டும்) சைவர்கள் ஆகிவிட முடியாது என்பதையும், இதுபோலவே திருநாமம் அணிவதாலும் பெருமாள் கோவிலுக்குப் போவதினாலும் வைஷ்

ணவர்கள் ஆகிவிட முடியாது என்பதையும், உதாரணமாக காங்கிரசில் சேருவதினாலோ, அதன் சின்னமாகிய கதர் ஆடை அணிவதினாலோ உண்மையான தேசாபிமானியாகி விட முடியாது என்பதையும், காங்கிரசில் சேராமலும் கதர் ஆடை அணியாமலும் இருப்பவர்களிலும் உண்மையான தேசாபிமானிகள் உண்டு என்பதையும், இதுபோலவே திருநீறு பூசாதவர்களிலும், சிவன் கோவிலுக்குப் போகாத வர்களிலும் உண்மையான சிவபக்தர்கள் உண்டுஎன்பதையும் இதற்கு உதாரணமாக, சிவத்திரு. குன்றக்குடி மடாதிபதி யைக் காட்டிலும், சிவத்திரு சுயமரியாதைக் குருவாகிய பெரியார் அவர்கள் ஒருபடி அதிகமாக உண்மையான சிவபக்தர் ஆவார் என்பதையும், இதுபோலவே காங்கிரசில் சேராமலும் கதர் ஆடை அணியாமலும் இருந்துவந்த புகழ் வள்ளலாகிய காலஞ்சென்ற **உயர்திரு. பழையகோட்டை பட்டக்காரர் நல்லதம்பி சர்க்கரை மன்ருடியார்** அவர்கள், காந்தியடிகளைக்காட்டிலும் ஒரு படி அதிகமான தேசபக்தியுடைவர் என்பதையும் எல்லோருக்கும் தெரி வித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதலால், சாதிப்பிரிவினையைச் சிந்தித்துப் பார்க்கும் பொழுது, எந்த சாதி, யாருக்குச் சொந்தம் என்னும் முறையில் எல்லோரும் ஒரே மனிதவர்க்கம்தான் என்பது எப்படித் தோன்றுகிறதோ அதுபோலவே, மத வேறு பாடுகளையும் சற்று சிந்தித்துப் பார்க்கில் எந்த மதம் எவருக்குச் சொந்தம் என்பதுதான் அடியேனது கேள்வி யாகும் என்பதையும் உதாரணமாக, சிறியேன் இந்து மதத்தில் பிறந்து சிவ சின்னங்களாகிய விபூதி ருத்ராட்சம் முதலியன அணிந்திருந்தபோதிலும் இயேசு நாதரையும், நபிநாயகத்தையும் உண்மையாகப் போற்றி வருகிறேன் என் பதையும், உண்மையில் எங்கள் முன்னோர்கள் காலத்திலி ருந்தே எங்களுக்குக் குலதெய்வமாக இருந்து விளங்கிவரு வதுகாலஞ்சென்ற ஒரு முஸ்லிம் பெரியார்தான் (ராவுத்தர்) என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக்கடமைப்

பட்டிருக்கிறேன். ஆகவே இனிமேலாவது பகுத்தறி வுடைய மக்கள் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்த்து இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் வேற்றுமைகளை மறந்து ஒரே கடவுள், ஒரே மதம், ஒரே சாதி என்ற உண்மையை யுணர்ந்து மற்றவர்களுக்கும் போதித்து நடந்து கொள்ளவேணுமாய்ப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளு கிறேன்.

9. ஆஸ்திகமும், நாஸ்திகமும்.

ஆஸ்தி என்றால் உண்டு என்றும் நாஸ்தி என்றால் இல்லை என்றும் எப்படிப் பொருள்படுகிறதோ அது போலவே, ஆண்டவன் ஒருவர் உண்டு என்பதும் அவரவர் செய்துள்ள புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடியே அந்த ஆண்டவன் சுக துக்கங்களைக் கொடுத்து வருகிறார் என்ப தும் உணர்ந்து, பாவ காரியங்களைச் செய்யாது விட்டு புண்ணிய காரியங்களைச் செய்து ஆண்டவனை வழிபட்டு வருவதற்கு ஆஸ்திக மார்க்கம் என்பதும், இதற்கு மாறாக புண்ணியமும் இல்லை பாவமும் இல்லை, சுகமும் இல்லை, துக்கமும் இல்லை, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்கிற முறையில் கடவுளை மறந்து, புண்ணிய பாவம் இன்ன தென்பதை யுணராமல் எல்லாம் மனிதன் செயலேயாகும் என்று எண்ணி நடந்து வருவதற்கு நாஸ்திக மார்க்கம் என்பதும் எல்லோரும் அறியக்கூடிய விஷயமாகும். மேலும் கடவுளையறிந்த மகான்களால் மக்களுக்குச் சாதகமாக எழுதி வைத்திருக்கும் மார்க்கம்தான் ஆஸ்திக மார்க்கம் ஆகும் என்பதையும், அதாவது கடவுள் நம்பிக்கை இருந்தால்தான் மக்கள் பாவ காரியங்களைச் செய்யாமல் புண்ணிய கருமங் களைச்செய்து அதன் பயனாக நல்ல பலனை அடைய முடியும் என்றும், கடவுள் நம்பிக்கை இல்லாவிடில் பாவகாரியங்களைச் செய்து அதன் பயனாக தீய பலனை அடைய வேண்டுமென் றும், ஆதலால் மக்கள் பாவகாரியங்களைச் செய்யாது புண்ணிய காரியங்களையே செய்யவேண்டும் என்ற உயர்ந்த

நோக்கத்துடன் பல நூல்களை எழுதி வைத்திருக்கிறார்கள் என்பதையும் அப்படியிருந்தும் மனத்தால் மருவிலரேனும் தாம் சேர்ந்த இனத்தால் இகழப்படுவர் என்ற வள்ளுவர் வாக்குப்படி சில சமயங்களில் கூட்டுறவுப் பழக்கத்தால் தீய வழிகளில் சென்று மக்கள் தீய பலன்களை அநுபவிக்க நேரிடுகிறது என்பதையும். உதாரணமாக சிறியேன் ஆண்டவன் சோதனையின் பயனாக ஒரு சமயம் நாஸ்திக மார்க்கத்தைப் பின்பற்றி ஒரு சிறிது கடவுளை மறந்த குற்றத்தினால்தான் பல கஷ்டங்களை அநுபவிக்கவேண்டி நேர்ந்தது என்பதையும், ஆனால் அந்தக் கஷ்டங்களை அநுபவிக்கும் காலத்தில் "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற வேதவாக்கை உறுதியுடன் நம்பி நல்லெண்ணத்தோடு நடந்து வந்ததின் காரணமாகத்தான் எனக்கு ஏற்பட்டுள்ள தீமைகளை எல்லாம் பொறுமையோடு சகித்து வந்து மற்றவர்களுக்கும் தீங்கு செய்யாமல் (ஜென்ம விரோதியே ஆத்ம சிநேகி என்றெண்ணி) இருந்து வந்தேன் என்பதையும் அந்த நம்பிக்கை இல்லாதிருந்தால் நானும் பெரியதொரு பாவத்துக்காளாகி இருக்க நேரிடும் என்பதையும், ஆகவே அந்தச் சகிப்புத் தன்மையும் கடவுள் நம்பிக்கையும்தான் இப்பொழுது எனக்கு அழிவற்ற சுகமாகிய ஆத்ம லாபத்தைக் கொடுத்திருக்கிறது என்பதையும் எல்லோருக்கும் குறிப்பாக எனது குருவாகிய பெரியார் அவர்களுக்கும் வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றும் பகல் இரவு எந்தக் காலத்திலும் இருப்பது போல ஆஸ்திகமும் நாஸ்திகமும் எப்பொழுதும் இருந்து வந்தபோதிலும் தற்போது ஆஸ்திகம் குன்றி, நாஸ்திகம் வளர்ந்து இருப்பது காரணமாகத்தான் நாட்டில் துன்பம் அதிகரித்து இருக்கிறதென்பதையும் அத்துன்பங்கள் நீங்கி மக்கள் இன்பம் அடையவேண்டுமானால் ஆஸ்திகம் பெருகி நாஸ்திகம் குறையவேண்டும் என்பதையும், இதற்கு மூல காரணமாக கடவுள் நம்பிக்கை என்னும் ஆத்மீக மார்க்கம் ஒன்றுதான் நன்மை தரக்கூடியது என்பதையும் எல்லோ

ருக்கும் வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நிற்க நமது முன்னோர்கள் ஆஸ்திக மார்க்கத்தை வளர்ப்பதற்காகத்தான் மடங்களையும் ஆலயங்களையும் ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதையும் ஆனால் அந்த ஸ்தாபனங்கள் எல்லாம் தங்கள் கடமையை மறந்து சிலருடைய சுயநலத்திற்குப் பயன்பட்டுவருவதின் காரணமாகத்தான் ஆஸ்திகம் குன்றி நாஸ்திகம் பெருகி இருக்கிறதென்பதையும் ஆகவே இனி மேலாவது ஷெ ஸ்தாபனங்கள் எல்லாம் விழிப்புற்று (குன்றக்குடி மடாதிபதிமாதிரி) தங்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்து ஆஸ்திகம் பெருகுவதற்கு வழிவகை செய்யவேணுமாய் எல்லா மடாதிபதிகளின் திருவடிகளிலும் இறைஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

10. அதிர்ஷ்டமும் முயற்சியும்.

அதிர்ஷ்டம் என்பதற்கு நன்மை என்றும், முயற்சி என்பதற்கு ஊக்கம் என்றும் பொருள்படும். இதற்கு மாறாக இருந்து வருவது துரதிர்ஷ்டம் அல்லது தீமையும் சோம்பல் அல்லது ஊக்கமின்மையுமாகும். இவற்றுள், அதிர்ஷ்டம் பெரியதா? முயற்சி பெரியதா? என்பதை நாம் சிந்தித்துப் பார்ப்போமானால், முயற்சி திருவினையாக்கும் என்று பெரியோர்கள் கூறியிருந்தபோதிலும், "அடுத்து முயன்றாலும் ஆகு நாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா" வென்றும், "ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும்," என்றும் ஆன்றோர்கள் கூறியிருப்பதால், எவ்வளவு முயற்சி எடுத்துக்கொண்ட போதிலும், அதிர்ஷ்டம் என்னும் நல்ல காலம் (ஆண்டவன் அருள்) இல்லாவிடில், அம்முயற்சி வீணாக முடியும் என்பதும், அதிர்ஷ்டம் இருக்கும் காலத்தில் முயற்சி இல்லாமலேயே காரியம் அனுகூலமாகி வருகிறதும் எல்லோரும் அறிந்த

விஷயமாகும். உதாரணமாக ஒரு தொழிலையோ, அல்லது ஒரு வியாபாரத்தையோ பலர் செய்து வருவதில் எல்லோருடைய முயற்சியும் ஒன்றாக இருப்பினும், சிலர் லாபத்தையும் சிலர் நஷ்டத்தையும் அடைந்து வருவதும், இதுபோலவே அரசியல், உலகியல் பொருளியல், இல்லறம் முதலிய துறைகளில் சிலர் அதிர்ஷ்ட வசத்தால் முன்னேற்றம் அடைந்து கொண்டு வருவதும் சிலர் அதிர்ஷ்டம் இல்லாத காரணத்தால் முன்னேற்றம் அடையாமல் இருப்பதோடு திடீரென்று கீழ் நிலைக்குச் சென்றுவிடுவதும் எல்லோரும் அறியக்கூடியதேயாகும். இதற்கு உதாரணமாக, அரசியல் துறையில் போலிப் பக்தரின் சீடர்களான நேரு ஆச்சாரியார், பிரகாசம் காமராஜ்போன்ற பதவிப்பித்தர்கள் அதிர்ஷ்ட வசத்தால் உயர்ந்த பதவி வகித்து வருவதும் அதிர்ஷ்டம் (அருள்) இல்லாத காரணத்தால் சேக் அப்துல்லா ஜெயப்பிரகாஷ் இராமமூர்த்தி, அண்ணாதுரை போன்ற உண்மைத் தேசாபிமானிகளின் ஆசைக்கனவுகள் பலிக்காமல் இருந்து வருவதும் எல்லோரும் அறிந்த விஷயமாகும். ஆகவே இவர்களது கனவு நனவாகவேண்டுமானால், எம்போன்று ஆண்டவனை வழிபட்டு அவரது அருளாகிய அதிர்ஷ்டத்திற்குப் பாத்திரராகவேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இதுபோலவே, ஆத்மீகத் துறையிலும் எம்போன்று உண்மையான துறவிகளுக்கும் உண்மையான தெய்வ பக்தர்களுக்கும் ஆதரவும் மதிப்பும் இல்லாமல் இருந்து வருவதும் போலித் துறவிகளுக்கும் (குன்றக் குடியார் மாதிரி) போலிப் பக்தர்களுக்கும் செல்வாக்கும் மதிப்பும் இருந்து வருவதும் உலகம் அறிந்த விஷயமாகும்.

நிற்க அந்த அதிர்ஷ்டம் ஏன் எல்லோருக்குமே இருப்பதில்லை என்பதும், அந்த முயற்சியும் ஏன் எல்லோருக்குமே வருவதில்லை என்பதும்தான் தேவ ரகசியம் ஆகும். அதாவது ஆண்டவனுடைய திருவருள் இருந்தால்தான், அதிர்ஷ்டமும் அதன் பயனாக முயற்சியும் ஏற்படுகிற

தென்பதும் இரண்டும் இருந்தால்தான், ஒருவன் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய முடியும் என்பதும் அதிர்ஷ்டம் இல்லாத காலத்துச் செய்யப்படும் முயற்சி விருதாவாய் முடியும் என்பதும் நன்கு தெரியவருகிறது. உதாரணமாக, சிறியேன் எனது வாழ்க்கைத் துணைவியையும் ஆசிரியர் பதவிக்குக் கொண்டுவர எவ்வளவோ முயற்சி செய்துகொண்டு வந்து, இருவரும் ஆசிரியர்களாக இருந்து நாட்டிற்கும் சமூகத்திற்கும் சேவை செய்ய எண்ணினேன். ஆனால், அது அதிர்ஷ்டம் இல்லாத காரணத்தால் (எண்ணத்தினலொன்றும் வாராது பரம சிவன் எத்தனப் படி முடியுமாம் என்றபடி) அந்த முயற்சியும் எண்ணமும் வீணுகப் போய்விட்டது. ஆகவே அந்த அதிர்ஷ்டம் நமக்கு எப்படிக் கிடைக்கிறது என்பதை சற்று சிந்தித்துப் பார்ப்போமானல்; சாதாரணமாக ஒரு பெரிய மனிதர்களின் தயவைச் சம்பாதிப்பதற்கே நம்மிடம் அநேக நல்ல குணங்கள் இருக்கவேண்டியது அவசியம் என்பதையும், இது போலவே ஆண்டவனிடமிருந்து அருளைப் பெறுவதற்கும் பல அரிய குணங்கள் நம்மிடம் இருக்கவேண்டியது அவசியம் என்பதையும் அதில், முதலாவதாக கடவுள் நம்பிக்கையும் பரோபகார சிந்தையும் சீவர்களிடத்தில் இரக்கமும், நிறைந்த அன்பும் சிறந்த நல்லெண்ணமும், இருக்கவேண்டும் என்பதையும் அப்பொழுதுதான் ஆண்டவனது கிருபா கடாட்சத்திற்கு நாம் உரியவர்களாக ஆகமுடியும் என்பதையும், ஆகவே இவற்றிற்கெல்லாம் மூலகாரணமாக கடவுள் வழிபாடாகிய விடா முயற்சியே இன்றியமையாதது என்பதையும், அவ்வழிபாட்டினல்தான், நல்லறிவு பெற்று ஆண்டவனது திருவருளாகிய அதிர்ஷ்டத்திற்குப் பாத்திரராகமுடியும் என்பதையும் உதாரணமாக சிறியேன், கல்வி யறிவிற் குறைந்த ஒரு சாதாரணமான ஆசிரியனுக இருந்த போதிலும், கடவுள் நம்பிக்கையும் முடிந்தவரை பிறருக்கு உபகாரம் செய்யவேண்டும் என்ற நல்லெண்ணமும், இருந்து வந்ததினல்தான் இப்பொழுது முன்பே கூறியபடி காந்தியடிகளும் காணமுடியாத கடவுளைக் காண்பதற்கும்

அவரது அருளைப் பெறுவதற்கும் வழிகாட்டியது என்பதை யும், எல்லோரும் உணரும்படிக்கும் மற்றவர்களும் இம்மார்க் கத்தைப் பின்பற்றி நடந்து ஆண்டவனது திருவருளுக்குப் பாத்திரராகும்படிக்கும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

11. முடிவுரை.

காங்கிரஸ் அபிமானி என்கிற முறையிலும், காந்தியடிகளைவிட ஒருபடி அதிகமாக அகிம்சையைக் கடைப்பிடித்து வரும் காந்தீயவாதி என்கிற முறையிலும், ஆண்டவன் அருளால் சில உண்மைகளை மக்களிடையே எடுத்துக்கூற வேண்டியது எனது கடமையாகும் என்பதையும் அதாவது காங்கிரஸ் ஸ்தாபனம் எதற்காக ஏற்பட்டதோ அந்த வேலை பூர்த்தியாகி விட்டபடியால் இனிமேல் அந்தக் காங்கிரஸ் கொள்கையால் நாட்டிற்கு எந்தவிதமான பிரயோஜனமும் இல்லையென்பதையும் அதைவிட மேலான கொள்கையாகிய ஆத்மீக மார்க்கம் ஒன்றுதான் நன்மை பயக்கும் என்பதையும், உதாரணமாக, சிறியேன் முன்பே கூறியுள்ளபடி ஆங்கில ஆட்சியில் (ஆங்கிலம் தெரியாமலிருந்தும்) ஆபீஸர் கிரேடில் உத்தியோகம் வகித்து சுயமரியாதையோடு வாழ்க்கை நடத்தி வந்திருக்கிறேன் என்பதையும், இப்பொழுது அரசியல் சுதந்தரம் ஏற்பட்டபிறகு அந்த ஆட்சியால் எனக்கு எந்தவிதமான அனுகூலமும் ஏற்படாத நிலைமையில் சுயமரியாதை இழந்து வாழவேண்டியிருக்கிறது என்பதையும் ஆனால் காரணம் இல்லாமல் காரியம் நடவாது காரியம் இல்லாமல் காரணம் நடவாது என்ற பழமொழிப்படியும், சாதனம் இன்றி ஒன்றைச் சாதிப்பார் உலகிலில்லை என்ற தத்துவப்படியும், ஆத்மீக மார்க்கத்தைக் கடைப்பிடித்து ஆண்டவனை சதா சிந்தித்து வருவதற்குத்தான் இப்பொழுது எனக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறதென்பதையும் அதன்பயனைத் தான் அவரது அருளைத் துணைகொண்டு, இந்த உலகத்தில் எந்த மகாத்மாவினாலும் அடையமுடியாத ஆத்மலாபத்தைப்பெற முடிந்

திருப்பதோடு காரண காரியங்களையுணர்ந்து உண்மை நிலையை உலகத்திற்கு எடுத்து விளக்கிக் காட்ட வேண்டும் என்கிற ஆண்டவனது திருவருள் நோக்கமாகும் என்பதையும், ஆகவே காங்கிரஸ் கொள்கையையுடைய ஒவ்வொரு தேசாபிமானிகளும் (இராஜாஜியைப் போன்று) கடவுள் கொள்கையாகிய ஆத்மீக மார்க்கத்தைக் கடைப்பிடித்து வந்தால் தான் நாடு வளம் பெற்று முன்னேற்றம் அடைந்து விளங்கும் என்பதை உணரவேணுமாயும் இதைத்தவிர வேறு எந்த அரசியல் கட்சியாலும் எந்தவிதமான சீர்திருத்தத்தாலும், எத்தனை ஐந்தாண்டுத் திட்டத்தாலும் மக்கள் முன்னேற்றம் அடையமுடியாது என்பதையும் எல்லோருக்கும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணமாக சுமார் 25வருடகாலமாக அடியேன் சுயமரியாதைக் கொள்கையைக் கடைப்பிடித்து நடந்து வந்தது போலவே 25வருடங்களாக காந்தியநெறியையும் காங்கிரஸ் கொள்கையையும் உண்மையாக அனுசரித்து வந்திருக்கிறேன் என்பதையும் அது காரணமாக எனது வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள இடையூறுகளுக்கெல்லாம் மூலகாரணமாக இருந்த ஒவ்வொருவரையும் (ஜென்ம விரோதியே ஆத்ம சிநேகி என்ற கொள்கைப்படி) ஆத்ம சிநேகிதர்களாகவே பாவித்து வந்திருக்கிறேன் என்பதையும் மற்றும் (அன்றொரு நாள் ஆதிமூலமே என்று அலறிய யானைக்கு பரமாத்மா அபயம் அளித்ததுபோல்) காங்கிரஸ் என்கிற யானைக்கும் கம்யூனிஸம் என்கிற முதலைக்கும் ஈரோட்டில் நடந்த தேர்தல் போட்டியில் காங்கிரஸ் என்கிற யானைக்கு ஆதரவாக இருந்து முன்பு கூறியபடி புலிகள் எல்லாம் பசுவாக மாறவேண்டும் என்று பிரார்த்தித்து வந்திருக்கிறேன் என்பதையும் அப்படியிருந்தும் காங்கிரஸ் அபிமானிகளாலும் (S. K. R. நீங்கலாக) காங்கிரஸ் ஆட்சியாலும் எனக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படாமல் இருப்பதானது, காங்கிரஸ் கொள்கைக்கும் காங்கிரஸ் ஆட்சிக்கும் ஒரு இறுதிக்காலம் என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறதென்பதையும் இதுபோலவே செல்வக்குமாரர் என்னும்

முருகப்பெருமான் திருவருளைப் பெற்ற இவ்வடிமையை (மற்ற மடாதிபதிகளைக் காட்டிலும் பொறுப்புணர்ந்து தமது கடமையைச் செய்துவரும்) சிவத்திரு குன்றக்குடி மடாதிபதியாகிய அருள்நெறிக்கூட்டத்தின் தலைவர் தமது திருக்கூட்டத்தில் இன்னும் சேர்த்துக் கொள்ளாமல் இருப்பதானது அவருடைய தவக்குறைவே காரணமாயிருப்பதோடு ஷை மடாதிபதி அருள்நெறிக் கூட்டத்தின் தலைவராயிருப்பதற்குத் தகுதியற்றவர் என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறதென்பதையும் எல்லோருக்கும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மற்றும் இதிலிருந்து 'ஞானம் ஞானத்தை விரும்பும், ஊனம் ஊனத்தை விரும்பும்'' என்கிற பழமொழிப்படி போலிகள் போலிகளைத்தான் விரும்புவார்கள் என்பதும், உண்மையை உண்மையுள்ளவர்கள்தான் ஆதரிக்கமுடியும் என்பதும் நன்கு தெரியவருகிறது. ஆகவே அந்தப் போலிக்கொள்கையாகிய காங்கிரஸ் ஆட்சியாலும், போலித் திருக்கூட்டமாகிய பொருள்நெறி கூட்டத்தாலும் உண்மையான தேசபக்தியும், தெய்வபக்தியும் வாய்ந்த இவ்வாத்மாவுக்கு எப்படி ஆதரவும், நன்மையும் ஏற்படாதிருக்கிறதோ, இதுபோலவே ஷை போலி ஆட்சியாலும், போலித் திருக்கூட்டத்தாலும் நமது நாட்டிற்கு எந்தவிதமான பிரயோஜனமும் ஏற்படாது என்பதை பொதுமக்கள் நன்கு சிந்தித்துப்பார்த்து உண்மையை உணரவேணுமாய்த் தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகிறேன். ஆகவே மேலே கூறியுள்ள உதாரணங்களிலிருந்து உலகத்திலேயே அரசியல், உலகியல், ஆத்மவியல், பொருளியல் முதலிய எல்லாத்துறைகளிலும் உண்மைக்கும், நன்மைக்கும் மதிப்பு இல்லை என்பதும், போலிகளுக்கும், தீமைகளுக்கும் தான் நாட்டில் செல்வாக்கும், ஆதரவும் இருந்து வருகிறதென்பதும் இவ்வுண்மையைக் கண்டுபிடித்து உலகத்திற்கு எடுத்து விளக்கிக் காட்டவே இறைவன் இவ்வாத்மாவைப் படைத்திருக்கிறார் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொண்டு, இனிமேலாவது பொதுமக்கள் அனைவரும் தங்கள்

தங்கள் பகுத்தறிவை உபயோகித்து சிந்தித்துப் பார்த்துப் புண்ணியத்தைப் போற்றி வளர்த்து உண்மையை ஆதரிக்க வேணுமாய் இறைஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மற்றும் மனிதப் பிறவியில் தோன்றியுள்ள மக்கள் அனைவரும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தம் நான்கையும் அடைய வேண்டுமானால் கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்னும் இந்நான்கு சாதனங்களும் அவசியமாகும் என்பதையும், இதைத்தான் சமீபத்தில் கோவைக்கு விஜயம் செய்திருந்த அரசியல் தலைவராகிய கனம் **நேருஜீ** அவர்கள் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு வேண்டிய மூல சாதனங்களில் மிக முக்கியமானவை சிந்தனா சக்தியாகும் என்று கூறியுள்ளார் என்பதையும் ஆனால் பிறருக்கு உபதேசம் செய்யும் போதினாகிய இவருக்கு ஏதாவது சிந்தனா சக்தி இருக்கிறதா என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்த்தால் தான் உண்மை புலனாகும் என்பதையும், அதாவது ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது, அந்த நாட்டிலுள்ள மக்கள் முன்னேற்றத்தையே குறிக்கும் என்பதையும் மக்கள் முன்னேற்றம் என்பது, ஒரு தனிமனிதனின் முன்னேற்றத்தைப் பொருத்ததாகவே ஆகுமென்பதையும், அந்தத் தனி மனிதனின் சுகதுக்கங்களுக்கு நல்வினை தீவினையாகிய புண்ணிய பாவங்களே முக்கிய காரணமாகும் என்பதையும், நல்வினை செய்தவர்கள் நல்ல பலனையும் தீவினை செய்தவர்கள் தீயபலனையும் அநுபவித்துத் தான் தீரவேண்டும் என்பதையும், நாட்டில் பெரும்பாலும் பாவச் செய்கை அதிகரித்துப் புண்ணியம் குறைந்து இருப்பது காரணமாகத்தான் பசியும் பட்டினியும் மேலிட்டு தரித்திரமும், பஞ்சமும் தலைவிரித்தாடுகிறது என்பதையும், ஆகவே

இவற்றைப் போக்குவதற்கு ஆத்மீக மார்க்கம் என்னும் தெய்வபக்தி ஒன்றைத் தவிர வேறு எந்தத்திட்டங்களாலும் எந்தவிதமான சீர்திருத்தத்தாலும் முடியாது என்பதையும், இவர் சற்று சிந்தித்துப் பகுத்தறிவை உபயோகித்துப் பார்ப்பாரேயானுல், இந்த நிமிஷமே அரசியலை உதறித்தள்ளிவிட்டு (சுவாமி விவேகானந்தர் போன்று) சுவாமி நேருஜியாகி கடவுள் கொள்கையை மக்களுக்குப் போதித்து அதன் மூலமாக, எல்லோரையும் முன்னேற்றம் அடையச்செய்து தாமும் ஆண்டவனது திருவருளுக்குப் பாத்திராவார் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொண்டு அவருடைய உள்ளத்தில் இத்தகைய மாறுதலை உண்டாக்கி வைத்து அருள் புரியுமாறு எல்லாம்வல்ல இறைவனை முழுமனதுடன் பிரார்த்திக்கின்றேன்.

இறுதியாக ஆண்டவன் அரசியல் சுதந்தரத்தை இந்தியாவில் நிலை நாட்டுவதற்கு காந்தியடிகளை உண்டாக்கியிருந்தது போலவே ஆத்ம சுதந்தரத்தை நிலை நாட்டுவதற்காக இவ்வாத்மாவைப் படைத்திருக்கிருர் என்பதையும், வியாபாரி என்கிற முறையில் காந்தியடிகள் உடைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுத்துக் கொண்டது போலவே விவசாயி (குடியானவன்) என்கிற முறையில் உணவுப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்வதுதான் இவ்வாத்மாவின் நோக்கமாகும் என்பதையும் கடவுள் நம்பிக்கை ஒன்றுதான் இந்நோக்கம் நிறைவேறுவதற்கு முக்கிய சாதனம் என்பதையும் தெரிவித்துக் கொள்வதுடன் காங்கிரஸ் அபிமானிகளும் அருள்நெறிக் கூட்டத்தின் தலைவரும் இவ்வாத்மாவை ஆதரிக்காமல்போன காரணத்திஞல்தான் உண்மையை யுணர்ந்து உலகத்திற்கு எடுத்துக் காட்ட முடிந்தது என்பதையும் ஆகவே ஷெ. காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கும், அருள்நெறிக் கூட்டத்தின் தலைவருக்கும் மனப் பூர்வமாக எனது நன்றி கலந்த வணக்கத்தைச் செலுத்திக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுபோலவே, உண்மை வெளிப்படுவதற்கு மூல காரணமாயிருந்த காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கும், அருள் நெறிக் கூட்டத்தின் தலைவருக்கும் நமது நாட்டு மக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். **சுபம்.**

வாழ்த்து.

கருணையிலா ஆட்சி கடுகி யொழிக
அருள்நயந்த நன்மார்க்கராள்க, தெருள்நிறைந்த
நல்லோர்நினைத்த நலம்பெறுக, நன்றுநினைந்து
எல்லோரும் வாழ்க இசைந்து.

(இராமலிங்க அடிகள்.)



12. உபதேச மொழிகள்.

1. ஆத்மசுகமே அழிவற்ற சுகம்.
2. ஆசையற்றவரே ஈசனைக் காண்பார்.
3. மாசற்ற மனமே வள்ளலை அறியும்.
4. பற்றற்றவரே பரமனை அறிவார்.
5. எதிரியை வெல்வது எளிது, எமனை வெல்வது அரிது.
6. அரிதான காரியத்தைச் செய். எளிதான காரியத்தைச் செய்யாதே.
7. ஜென்ம விரோதி, ஆத்ம சிநேகி.
8. தேச பக்தியிற் சிறந்தது இராஜபக்தி, அதைவிடச் சிறந்தது தெய்வபக்தி.
9. தேசத் துரோகத்திற் பெரியது இராஜத் துரோகம், அதைவிடக் கொடியது தெய்வத் துரோகம்.
10. தேசாபிமானத்திற் சிறந்தது பாஷாபிமானம் அதைவிடச் சிறந்தது மதாபிமானம்.
11. அரசியல் ஞானத்தைவிட ஆத்ம ஞானமே மேலானது.
12. அரசியல் சீர்திருத்தத்தைவிட ஆத்மீக சீர்திருத்தமே மேலானது.
13. சமூக சீர்திருத்தத்தைவிட சமய சீர்திருத்தமே மேலானது.
14. காங்கிரஸ் கொள்கையைவிட கடவுள் கொள்கையே மேலானது.
15. காந்திய நெறியைவிட ஆத்மீக நெறியே மேலானது.

16. கதரை விருத்தி செய்வதைவிட கலையை விருத்தி செய்வதே மேலானது.

17. சர்வோதயத்தைக் காட்டிலும் ஞானோதயமே மேலானது.

18. பூமிதானம் செய்வதைவிட புத்திதானம் செய்வதே மேலானது.

19. மதுவை விலக்குவதைவிட மதியை விளக்குவதே மேலானது.

20. தேச சேவை செய்வதைவிட தெய்வ சேவை செய்வதே மேலானது.

செல்வக் குமாரர் திருவடி சரணம்.



தமிழன் அச்சகம், ஈரோடு.